



# Voice of Jagadguru



advaitam paramanandam

an e-magazine on advaita

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஸ்ரீ சிருங்கேரீ சாரதாபீடம் மஹாசந்நிதானம் ஸ்ரீஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அருளுரை



மனிதனக்குக் கடவுள் பக்தி முக்கியமாக இருக்க வேண்டும். பக்தியின் மஹிமையைப் பற்றி புராணங்களில் நிறையக் கூறப்பட்டிருக்கிறது. பக்தி பலவிதமாக இருக்கலாம். சிலர் தன்னுடைய அல்லது பிறருடைய துன்பத்தைப் போக்க கடவுளிடம் பக்தி செலுத்துவார்கள். கடவுளின் அருளும் பெறுவார்கள். பணக்கஷ்டத்தால் பீடிக்கப்பட்ட சிலர், ச்ரத்தையுடன் கடவுளை வழிபட்டு தங்கள் துன்பத்தைப் போக்கிக்கொள்வார்கள். சிலர். ஞானத்தைப் பெற்று மோக்ஷம் அடைவதற்காக, பகவானைப் ப்ரார்த்தனை செய்வதோடு ஸத்கார்யங்களிலும் ஈடுபாடோடிருப்பார்கள்.

त्वमेकः किल लोकानां क्लिष्टानां क्लेशनाशनः ।
त्वमेको दह्यमानानामपवर्गो ऽसि संस्मृतः ।।
த்வமேக: கில லோகானாம்’ க்லிஷ்டானாம்’ க்லேஶநாஶன: |
த்வமேகோ த³ஹ்யமானாநாமபவர்கோ³ (அ)ஸி ஸம்’ஸ்ம்ரு’த: ||

என்று பகவானை ஸ்துதித்திருப்பதாக பாகவதத்தில் கூறப்பட்டுள்ளது. ஆனால், துன்பம் வந்தபொழுதுதான் பகவானிடம் பக்தி செலுத்த வேண்டும் என்று எண்ணக்கூடாது. துன்பங்கள் ஏதும் இல்லாத ஸமயத்திலும் எதையும் வேண்டிக்கொள்ளாமலேயே கடவுள் மீது அன்பு நிறைந்த பக்தி செலுத்துவது தான் மிகவும் உத்தமமானது. அவ்வாறு பக்தி செலுத்துபவன் பகவானுக்கு மிகப் பிரியமான பக்தனாகிவிடுவான்.

मतिर्मयि निबद्धेयं न विपद्येत कर्हिचित् ।
प्रजा सर्गनिरोधे ऽपि स्मृतिश्च मदनुग्रहात् ।।
மதிர்மயி நிப³த்³தே⁴யம்’ ந விபத்³யேத கர்ஹிசித் |
ப்ரஜா ஸர்க³நிரோதே⁴ (அ)பி ஸ்ம்ரு’திஶ்ச மத³னுக்³ரஹாத் ||

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

அதாவது, 'என்னிடம் பக்தி செலுத்துவதில் ஈடுபட்டுள்ள புத்தியானது ஒருபொழுதும் நாசமடையாது. ஸ்ருஷ்டியின்பொழுதும், ப்ரளயத்தின் பொழுதும் கூட எனது அருளால் ஞாபகசக்தி நாசமடையாது' என்று பகவானே பகவத்கீதையில் கூறியுள்ளார். ஆகையால் துன்பம் வந்தாலும் வரமால் இருந்தாலும் கடவுள் மீது ச்ரத்தையும் பக்தியும் நிரந்தரமாக இருக்க வேண்டும்.

இதை நன்றாகப் புரிந்துகொண்டு எப்பொழுதும் கடவுளிடம் நிபந்தனையற்ற பக்தியுடன் இருக்க எல்லோரையும் ஆசீர்வதிக்கிறோம்.

நன்றி - அம்மன் தரிசனம்

ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகளின் அம்ருத துளிகள்




ஒருவன் தனக்கு சுகம் வந்தாலும் துக்கம் வந்தாலும் ஒரே மாதிரி இருக்க வேண்டும்..துக்கம் வந்தால் அழுவோம்..ஒரே மாதிரி இருக்க வேண்டும் என்றால் சுகம் வந்தாலும் அழுது கொண்டிருக்க வேண்டுமா.? இவ்வாறு விபரீதமாக அர்த்தம் செய்து கொள்ளக்கூடாது.. சுகத்திலும் துக்கத்திலும் நம் மனது சஞ்சலப்படக் கூடாது என்பதுதான் பகவான் கூறிய உபதேசத்தின் தாத்பர்யம்.. சிலபேர் சுகம் அதிகமாக வந்துவிட்டால் தலைகால் தெரியாமல் குதிப்பார்கள்.. சிறிய துக்கம் வந்தாலும் வானமே தலையில் விழுந்தாற்போல் கவலைப்பட்டுக் கொண்டிருப்பார்கள்.. இந்த இரண்டு பாவனைகளுமே தவறானவை தான்.. நம்முடைய சுகமும் துக்கமும், இறைவனின் ஸங்கல்பத்தினால்தான் என்ற எண்ணத்துடனிருந்து, அதிக மகிழ்ச்சி, அதிக துக்கம் போன்றவற்றில் இருந்து விடுதலை பெற வேண்டும்.

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)
An Unit of the e magazine Voice of Jagadguru)

# ஷண்மதம் - ஆறு பிரிவுகள்

(புதுக்கோட்டை பூஜ்யஸ்ரீ ப்ரணவாநந்த மஹாஸ்வாமிகள்)

## காணாபத்யம்



ஓம் பத்ரம் கர்ணேபி: ஸ்ருணுயாம தேவா: பத்ரம்

பஸ்யேமாக்ஷபிர் யஜத்ரா; ஸ்திரைரங்கைஸ் துஷ்டுவா ஸஸ்துநூபி:

வ்யஸேம தேவஹிதம் யதாயு: ஸ்வஸ்தி ந இந்த்ரோ வ்ருத்தஸ்ரவா:

ஸ்வஸ்தி ந: பூஷா விஸ்வ வேதா ஸ்வஸ்தி நஸ்தார்க்ஷ்யோ அரிஷ்டநேமி:

ஸ்வஸ்தி நோ ப்ருஹஸ்பதிர் ததாது ஓம் ஸாந்தி: ஸாந்தி: ஸாந்தி:

அத கணேஸ அதர்வஸீர்ஷம் வ்யாக்யாஸ்யாம்

ஓம் நமஸ்தே கணபதயே த்வமேவ ப்ரத்யக்ஷம் தத்த்வமஸி த்வமேவ

கேவலம் கர்தாஸி த்வமேவ கேவலம் தர்தாஸி த்வமேவ கேவலம்

ஹர்தாஸி த்வமேவ ஸர்வம் கல்விதம் ப்ரஹ்மாஸி த்வம்

ஸாக்ஷாதா த்மாஸி நித்யம் ருதம் வச்மி ஸத்யம் வச்மி

அவ த்வம் மாம் அவ வக்தாரம் அவ ஸ்ரோதாரம் அவ தாதாரம்

அவ தாதாரம் அவாநூசானமவ ஸிஷ்யம் அவ பஸ்சாத்தாத் அவ

புரஸ்தாத் அவ உத்தராத்தாத் அவ தக்ஷிணாத்தாத் அவ சோர்த்வாத்தாத்

அவாதராத்தாத் ஸர்வதோ மாம் பாஹி பாஹி ஸமந்தாத்

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

த்வம் வாங்மயஸ் த்வம் சின்மய: த்வம் ஆநந்தமயஸ்த்வம்

ப்ரஹ்மமய: த்வம் ஸச்சிதாநந்தா த்விதீயோஸி த்வம் ப்ரத்யக்ஷம்

ப்ரஹ்மாஸி த்வம் ஜ்ஞாநமயோ விஜ்ஞானமயோஸி

ஸர்வம் ஜகதிதம் த்வத்தோ ஜாயதே ஸர்வம் ஜகதிதம்

த்வத்தஸ்திஷ்டதி ஸர்வம் ஜகதிதம் த்வயி லயமேஷ்யதி ஸர்வம்

ஜகதிதம் த்வயி ப்ரத்யேதி த்வம் பூமி ராபோ நலோ நிலோ நப:

த்வம் சத்வாரி வாக்பதாநி த்வம் குணத்ரயாதீத: த்வம் அவஸ்தாத்ரயாதீத: த்வம்

தேஹத்ரயாதீத: த்வம் காலத்ரயாதீத: த்வம் மூலாதார ஸ்திதோஸி

நித்யம் த்வம் ஸக்தித்ரயாத்மக: த்வாம் யோகினோ த்யாயந்தி நித்யம்

த்வம் ப்ரஹ்மாஸ்த்வம் விஷ்ணுஸ்த்வம் ருத்ரஸ்த்வம் இந்த்ரஸ்த்வம்

அக்நிஸ்த்வம் வாயுஸ்த்வம் ஸூர்யஸ்த்வம் சந்த்ரமாஸ்த்வம் ப்ரஹ்ம பூர்புவ: ஸுவரோம்

கணாதிம் பூர்வமுச்சார்ய வர்ணாதீம் ததநந்தரம் அனுஸ்வார: பரதர:

அர்தேந்து லஸிதம் தாரேண ருத்தம் ஏதத்தவ மநுஸ்வரூபம்

ககார: பூர்வ ரூபம் அகாரோ மத்யம ரூபம் அநுஸ்வாரஸ் சாந்த்ய

ரூபம் பிந்துருத்தர ரூபம் நாத: ஸந்தானம் ஸஹிதா ஸந்தி:

ஸைஷா கணேஸ வித்யா கணக ருஷி: நிச்ருத் காயத்ரீ ச் சந்த:

கணபதிர் தேவதா

ஓம் கம் கணபதயே நம: (தொடரும்...)

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

# தேவி வழிபாடு

(புதுக்கோட்டை பூஜ்யஸ்ரீ ப்ரணவாநந்த ஹஸ்வாமிகள்)

ஸ்ரீ வித்யையின் ஶக்தி

ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமத்தின் பூர்வ பாக 18 மற்றும் 19-ஆவது ஶ்லோகங்கள் கூறுகின்றன –



ஸ்ரீவித்யா அனைத்து மந்திரங்களுள் ப்ரதம மந்த்ரமாக உள்ளது. காதி வித்யா மற்ற ஸ்ரீவித்யா மந்திரங்களுள், ஸ்ரீபுரம் (ஸ்ரீ தேவியின் இருப்பிடம்) அனைத்து நகரங்களுள், அனைத்து ஶக்திகளுள் ஸ்ரீ லலிதா தேவி, ஸ்ரீவித்யா உபாச-கர்களுள் ஶிவபெருமான், எனவே அனைத்து ஸஹஸ்ர-நாமங்களுள் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம்.

தந்திரங்கள் கூறுகின்றன – சரமே ஜன்மனி யதா ஸ்ரீ வித்யோபஸகோ பவேத் – ஒருவர் ஸ்ரீ தேவியை கடைசி பிறப்பில் மட்டுமே வணங்க முடியும். பத்து மஹா வித்யைகளில், த்ருபுர சுந்தரி வித்யா அல்லது ஸ்ரீவித்யா-தான் தென்னிந்தியாவில் பிரபலமான ஒரே வித்யா.

இந்த ஸ்ரீ வித்யா உபாசனையில் நான்கு முக்கியமான முறைகள் உள்ளன – சமயாசாரம், வாமாச்சாரம், தக்ஷிணாச்சாரம் மற்றும் கௌலாச்சாரம். இவற்றில் சமயாசாரம் மற்றும் தக்ஷிணாசாரம் ஆகியவை வேத பாதைகளை அடிப்படையாகக் கொண்டவை. எந்த முறையாக இருந்தாலும், ஆசிரியரால் அறிவுறுத்தப் பட்டதைப் பின்பற்றுவதன் மூலம் எல்லோரும் ஸ்ரீதேவியின் கருணைக்கு பாத்திரமாகலாம்.

ஸ்ரீவித்யா உபாசனையில் ஸபர்யா பத்ததி என்ற முறை தற்பொழுது உலகம் முழுவதும் நடைமுறையில் உள்ளது. ஸ்ரீவித்யா திரிபுரசுந்தரி வித்யா என்றும் கூறப்படுகின்றது. ஸ்ரீவித்யைகளிடையே காதிவித்யா மிகச் சிறந்தது என்று ப்ரஹ்மாண்ட புராணம் குறிப்பிடுகின்றது. இது பின்வரும் பிரிவுகளில் விரிவாக விவாதிக்கப் பட்டுள்ளது.

ஸ்ரீ தேவியை, ஸ்ரீவித்யா வடிவத்தில் லலிதாம்பிகே, திரிபுரசுந்தரி, பரய், பராப் பட்டாரிக, பராஹந்தா, சித்ஶக்தி:, சம்வித் போன்ற பலவாறு அழைக்கப்பர். இவை அனைத்தும் ஒரே அர்த்தத்தை வெளிப்படுத்துகின்றன.

(தொடரும்…)

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)
An Unit of the e magazine Voice of Jagadguru)

# ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவாபிநவ நரஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகளின் திவ்ய சரித்திரம்

## 5. உத்தரதேச யாத்திரை

இந்த சந்திரமௌலீசுவர லிங்கம் ஸ்படிகமில்லையென்றும், இது ஒரு ரத்ன விசேஷமென்றும் தெரிய வருகிறது. இதன் சிரஸ்ஸில் பிரகாசிக்கும் சந்திரனுடைய காந்தியும் ஆச்சர்யகரமாயிருக்கும். ஆதி ஆசார்யார் முதல் இதுவரை பூஜிக்கப்பட்டு வந்த அமானுஷமான மூர்த்திகள் மறைந்தால் அதனால் யாவருக்கும் மஹத்தான விபத்தே யுண்டாகுமல்லவா? அதனாலேயே இவ்வளவு கடோரமாக தபஸ்செய்து இம்மூர்த்திகளை ஸ்ரீமத் ஆசார்யார் திரும்பப் பெற்று லோகத்திற்கு க்ஷேமத்தைச் செய்து வைத்தார்கள். இந்த ஸம்பவம் ஏற்பட்டதும் உடனே சிருங்கேரிக்குத் திரும்பி தன் குருநாதர் அதிஷ்டானத்தில் இம்மூர்த்திகளை ஒப்புவித்துவிட்டுத்தான் மேல் கார்யம் கவனிக்க வேண்டுமென்று தோன்றி வெகுவேகமாக பிரயாணம் செய்து சிருங்கேரிக்குத் திரும்பிவந்து சேர்ந்தார்கள்.



ஸ்ரீ ஸச்சிதாநந்தசிவாபிநவ நரஸிம்ஹபாரதீஸ்வாமிகள்.

## 6. ராமேசுவர யாத்திரை

சிருங்கேரிக்குத் திரும்பிவந்த பிறகு இரண்டு வருஷகாலம் அங்கேயே வித்யார்த்திகளுக்கு பாடம் சொல்வதிலும், தானாக கிரந்தங்களை பரிசீலனம் செய்வதிலும், பூஜை, ஜபம் தியானாதிகள் செய்வதிலுமாக ஆனந்தமாக விருந்தார்கள். அதன்பிறகு ஸ்ரீ சாரதாம்பாள் பிரேரணையால் தக்ஷிணதேச யாத்திரை போகவேண்டுமென்ற ஸங்கல்பம் ஏற்பட்டது. அந்த

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

ஸமயம் மைசூர் மஹாராஜா சாமராஜ பிரபுக்களும், தன் ராஜதானிக்கு விஜயமாகி தன்னையும் தன் குடும்பஸ்தர்களையும் அனுக்ரஹிக்க வேண்டுமென்று விக்ஞாபனப் பத்திரிகை மூலமாய் பிரார்த்தித்தார்கள். அப்படியே கரu ஜ்யேஷ்ட பகுள பஞ்சமீ (26-6-1891) வெள்ளிக்கிழமை சிருங்கேரியிலிருந்து புறப்பட்டு ருஷ்யசிருங்காச்ரமமான 'கிக்க' என்ற அக்ரஹாரத்திற்கு விஜயமானார்கள். அங்கிருந்து சிக்மகளூர், பேலூர், ஹாஸன் மார்க்கமாக மைசூர் ராஜதானியில் பிரவேசம் செய்தார்கள். முந்தின ஸம்பிரதாயத்தையனுஸரித்து விசேஷ மரியாதையுடன் மஹாராஜா ஸ்ரீமத் ஆசார்யரை வரவேற்று அரண்மனையில் தூளிபாத பூஜைசெய்து ராஜபுத்ரீ புத்திரர்களுக்கு ஸ்ரீஸ்வாமிகளின் தரிசனம் செய்வித்து அவர்களுடைய விசேஷ அனுக்ரஹத்திற்கு பாத்திரரானார்கள். ராஜபுத்ரீ புத்திரர்களுக்கு ஸ்ரீ சாரதாம்பாள் பிரஸாத ரூபமாக ரத்னாபரணங்கள் கொடுக்கப்பட்டன. ஸ்ரீஸ்வாமிகள் இறங்கியிருந்த நஞ்சராஜ பகதூர் சத்திரத்திலேயே சாதுர்மாஸ்ய ஸங்கல்பம், வியாஸ பூஜை, நவராத்திரி மஹோத்ஸவம் இவைகளை நடத்தினார்கள். சாதுர்மாஸ்ய இரண்டு மாஸத்தில் ஏற்படும் செலவு முழுவதையும் அரண்மனையிலிருந்தே நிர்வஹித்தார்கள். மேலால் இரண்டு மாஸம் சிஷ்ய மண்டலிகள் ஸத்கரித்தார்கள்.

அங்கே இருக்கும்போது ஸம்ஸ்தான வழக்கப்படி பாத்ரபதமாஸத்தில் கணபதி ஸபை அதிவிமரிசையாக நடந்தது. அக்காலத்தில் பிரஸித்தர்களான பண்டிதரத்னம் ஸீதாராம சாஸ்திரிகள், பண்டித ரத்னம் கஸ்தூரி ரங்காசார்யார், தர்மாதிகாரி காசி சாம சாஸ்திரிகள், தர்மாதிகாரி கும்பகோணம் சேஷாசார்யார், பழமநேரி ஸுந்தர சாஸ்திரிகள், நாமகுண்டுலு சாமாசார்யார், விபாகம் ஸ்ரீகண்ட சாஸ்திரிகள் முதலானவர்கள் தர்க்க வியாகரண வேதாந்தாதி சாஸ்திரங்களில் தேர்ந்த ஞானமுள்ளவர்களாக இருந்து ஆஸ்தான வித்வான்களாகவுமிருந்தார்கள். ஸ்ரீஸ்வாமிகளவர்களும் பிரதி தினமும் ஸபையை யலங்கரித்து சாஸ்திரவியவஹாரங்களில் தானும் கலந்து கொண்டு உத்ஸாஹமாக ஆத்யக்ஷ்யம் வஹித்தார்கள். இந்த சோபையைக் கண்டு ஆனந்திக்க வேண்டுமென்று மஹாராஜா அவர்களும் ஒருநாள் ஸபைக்கு வந்து பண்டிதர்களை உத்ஸாஹப்படுத்தினார்கள். அநேகம் லௌகிகர்களும் வந்து தங்கள் ஸந்தேகங்களைச் சொல்வார்கள். அவரவர்களுக்குத் தக்கபடி விக்ரஹாராதனம், ஜாதி வியவஸ்தை, வேதப்ராமாண்யம், அவதார ரஹஸ்யம், பாலிகா விவாஹம், ஸமுத்ர யானம், நவீன வித்யாப்யாஸம் முதலான விஷயங்களைக் குறித்து உண்டாயிருந்த சந்தேஹங்களை நிவிருத்திசெய்து நம்பிக்கையும் தைவ பக்தியும் அதிகமாகும்படி செய்துவந்தார்கள்.

(தொடரும்...)


## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

||श्रीः||

## || श्रीगणेश भुजङ्गम् ||

## || ஶ்ரீக³ணேஶ புஜங்க³ம் ||





रणत्क्षुद्रघण्टानिनादाभिरामं चलत्ताण्डवोद्दण्डवत्पद्मतालम् ।
लसत्तुन्दिलाङ्गो परिव्यालहारं गणाधीशमीशानसूनुं तमीडे ॥ १ ॥

ரணத்க்ஷுத்³ரக⁴ண்டானிநாதா³பி⁴ராமம்'
சலத்தாண்ட³வோத்³த³ண்ட³வத்பத்³மதாலம் |
லஸத்துந்தி³லாங்கோ³ பரிவ்யாலஹாரம்'
க³ணாதீ⁴ஶமீஶானஸூனும்' தமீடே³ || 1 ||


ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யரான ஸ்ரீ ஜகத்குரு சங்கராசார்ய ஸ்வாமிகள் இடையூறுகளனைத்தையும் நீக்கி சகல மனோரதங்களையும் நிறைவேற்றும் வல்லமையுடைய விநாயகக் கடவுளை இவ்வாறாகப் போற்றுகின்றார். சர்வேச் வரனுடைய திருக்குமாரன் ஆனந்த தாண்டவம் புரிகின்றார். நடனம் செய்கின்றவனுக்குத் தக்க பக்க வாத்யங்கள் இன்றியமையாதவை. ஆகவே அது சமயம் அவர் அணிந்துள்ள சிறு மணிகள் இனிய ஒலியை எழுப்புகின்றன. அவர் கையிலுள்ள தண்டுடன் கூடிய தாமரை இங்குமங்கும் அசைந்து தாளம் போடுகின்றன. நடனமாடுபவன் தன்னை நன்கு அலங்கரித்துக்கொண்டு மேடையில் காட்சியளிப்பான். அதேபோல சிவபெருமானின் திருமகனும் தன் பருத்த உடலை ஸர்பஹாரத்தால் ஒளி மிளிரச் செய்து கொண்டு இன்னிசை முழங்க ஆனந்த நடனமாடுவது குறிப்பிடத்தக்கது. கணேச்வரனை இங்கு ஈசானஸூனு என்று கூறுவது மிகவும் பொருத்தமானது."ஆத்மா வை புத்ரநாமாஸி " என்று மறைகள் கூறுகின்றன . மகன் தந்தையின் குணங்களைப் பெறுதல் இயற்கையே. நடனக் கலைக்கு குரு சிவபெருமான். அக்கலையைத் தனயனும் பெற்றுச் சீருடன் விளங்குவது இங்கு ஈசானஸூனு என்பதால் காட்டப்படுகின்றது. ஈசபுத்திரரின் ஆனந்தநிலை இங்கு நன்கு சித்தரிக்கப்பட்டுள்ளது. அந்நிலையில் அவனை வழி படுவதால் சகல சித்திகளும் கிடைக்குமென்பது திண்ணம்.

(தொடரும் ...)



# Voice of Jagadguru

advaitam paramanandam — an e-magazine on advaita



## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

# || श्री मीनाक्षी स्तोत्रम् ||

ஸ்ரீ மீனாக்ஷி ஸ்தோத்ரம்
(ஹாலாஸ்ய மாஹாத்மியத்தில் உள்ள ஸ்தோத்திரம்.)

या स्तुता सर्वपापघ्नी सर्वोपद्रव नाशिनी |
नमस्तस्यै सुमीनाक्ष्यै देव्यै मङ्गलमूर्तये ||9||
யா ஸ்துதா ஸர்வபாபக்⁴னீ ஸர்வோபத்³ரவ நாஶினீ |
நமஸ்தஸ்யை ஸுமீனாக்ஷ்யை தே³வ்யை மங்க³லமூர்தயே ||9||



எந்த அம்பாள், ஸ்தோத்ரம் செய்வதாலேயே நம் எல்லா பாபங்களையும் போக்குகிறாளோ, அவ்விதம் எல்லா உபத்ரவங்களையும் நாசம் செய்கிறாளோ, அந்த தேவியும், மங்களத்தையே உருவமாகக் கொண்டவளுமான ஸ்ரீ மீனாக்ஷிக்கு நமஸ்காரம்.

या ध्याता परमाशक्तिः सर्वसिद्धिकरी शिवा |
नमस्तस्यै सुमीनाक्ष्यै देव्यै मङ्गलमूर्तये ||10||
யா த்⁴யாதா பரமாஶக்தி: ஸர்வஸித்³தி⁴கரீ ஶிவா |
நமஸ்தஸ்யை ஸுமீனாக்ஷ்யை தே³வ்யை மங்க³லமூர்தயே ||10||

மங்கள ஸ்வரூபிணியான எந்த பராசக்தி, தியானம் செய்யப்பட்ட மாத்திரத்திலேயே, எல்லா ஸித்திகளையும் செய்கிறாளோ, அந்த தேவியும், மங்களத்தையே உருவமாகக் கொண்டவளுமான ஸ்ரீ மீனாக்ஷிக்கு நமஸ்காரம்.

यया देव्या विरहितः शिवोपि हि निरर्थकः |
नमस्तस्यै सुमीनाक्ष्यै देव्यै मङ्गलमूर्तये ||11||
யயா தே³வ்யா விரஹித: ஶிவோபி ஹி நிரர்த²க: |
நமஸ்தஸ்யை ஸுமீனாக்ஷ்யை தே³வ்யை மங்க³லமூர்தயே ||11||

எந்த தேவியில்லாமல் சிவனும் பொருள் அற்றவராக ஆகிறாரோ, அந்த தேவியும், மங்களத்தையே உருவமாகக் கொண்டவளுமான ஸ்ரீ மீனாக்ஷிக்கு நமஸ்காரம்.

चराचरं जगत्सर्वं यस्याः पादसमुद्भवम् |
नमस्तस्यै सुमीनाक्ष्यै देव्यै मङ्गलमूर्तये ||12||
சராசரம்' ஜக³த்ஸர்வம்' யஸ்யா: பாத³ஸமுத்³ப⁴வம் |
நமஸ்தஸ்யை ஸுமீனாக்ஷ்யை தே³வ்யை மங்க³லமூர்தயே ||12||

சராசரமான (चराचरं) இந்த உலகம் முழுவதும் எந்த அம்பாளின் பாதத்திலிருந்து உண்டாயிற்றோ, அந்த தேவியும், மங்களத்தையே உருவமாகக் கொண்டவளுமான ஸ்ரீ மீனாக்ஷிக்கு நமஸ்காரம். (தொடரும்…)

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)
An Unit of the e magazine Voice of Jagadguru)

# श्रीमन्नारायणीयम्

## ஸ்ரீமந்நாராயணீயம்

### चतुर्थ दशकम्

நாலாவது தசகம் -அஷ்டாங்க யோகம்

अग्नि - वासर - वलक्ष पक्षगै रुत्तरायण जुषा च दैवतैः ।
प्रापितो रविपदं भवत्परो मोदवान् ध्रुवपदान्त- मीयते ||11||
அக்³னி - வாஸர - வலக்ஷ பக்ஷகை³ ருத்தராயண ஜுஷா ச தை³வதைः |
ப்ராபிதோ ரவிபத³ம்' ப⁴வத்பரோ மோத³வான் த்⁴ருவபதா³ந்த- மீயதே ||11||





ஹே குருவாயூரப்பா ! அக்னி, பகல், சுக்லபக்ஷம், உத்தராயணம் ஆகியவற்றின் அதிஷ்டான தேவதைகளால் ஆதித்ய லோகத்தில் சேர்க்கப் பெற்ற உமது பக்தன் ஸந்தோஷமாக துருவபதம் வரை செல்கிறான். உன்னை அண்டியவர்களின் உத்தமமான நிலை இது.

आस्थितोऽथ महरालये यदा शेषवक्त्र- दहनोष्मणाऽर्द्यते ।
ईयते भवदुपाश्रयस्तदा वेधसः पदमतः पुरैव वा ||12||
ஆஸ்தி²தோ(அ)த² மஹராலயே யதா³ ஶேஷவக்த்ர- த³ஹனோஷ்மணா(அ)ர்த்³யதே |
ஈயதே ப⁴வது³பாஶ்ரயஸ்ததா³ வேத⁴ஸः பத³மதः புரைவ வா ||12||

ஹே குருவாயூரப்பா ! பிறகு மஹர்லோகத்தை யடைந்து உமது பக்தன் ஆதிசேஷனுடைய முகங்களிலுள்ள அக்னியின் ஆவியால் வருந்தும் (பிரலயத்தின்) பொழுதோ அதற்கு முன்பாகவோ பிரம்மலோகத்தை அடைகிறான். உன்னை அண்டியவர்களின் உண்மை நிலை இது.

तत्र वा तव पदेऽथवा वसन् प्राकृतप्रलय एति मुक्तवान् ।
स्वेच्छया खलु पुराऽपि मुच्यते संविभिद्य जगदण्डमोजसा ।। 13 ।।
தத்ர வா தவ பதே³(அ)த²வா வஸன் ப்ராக்ரு'தப்ரலய ஏதி முக்தவான் |
ஸ்வேச்ச²யா க²லு புரா(அ)பி முச்யதே ஸம்'விபி⁴த்³ய ஜக³த³ண்ட³மோஜஸா ||13||

ஹே குருவாயூரப்பா ! பிரம்மலோகத்திலாவது அல்லது உமது லோகத்திலாவது வசித்துக்கொண்டு ப்ராக்ருத ப்ரலயத்தில் மோக்ஷத்தையடைகிறாள். அல்லது தன்னிஷ்டப்படி யோகபலத்தால்


Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita


## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

பிரம்மாண்டத்தைப் பிளந்து கொண்டு முக்தனாகிறான். சகலமும் உனது விருப்பமன்றோ



तस्य च क्षितिपयो महोऽनिल-द्यो महत्प्रकृति सप्तकावृतोः ।
तत्तदात्मकतया विशन् सुखो याति ते पदमनावृतं विभो **||14||**

தஸ்ய ச க்ஷிதிபயோ மஹோ(அ)னில-த்$^{3}$யோ மஹத்ப்ரக்ரு’தி ஸப்தகாவ்ரு’தோः |
தத்ததா$^{3}$த்மகதயா விஶன் ஸுகோ$^{2}$ யாதி தே பத$^{3}$மனாவ்ரு’தம்’ விபோ$^{4}$ **||14||**

ஹே குருவாயூரப்பா ! ஹே பிரபோ! அந்த பிரம்மாண்டத்தின் ஆவரணங்களான பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம், மஹத், ப்ரக்ருதி என்ற ஏழு ஆவரணங்களையும் அந்தந்த வடிவாகிக் கடந்து சுகமாக ஆவரணமற்ற உமது ஸ்தானத்தை அடைந்து ஸாயுஜ்ய முக்தியை எய்துகிறான்.

अर्चिरादि गतिमीदृशीं व्रजन् विच्युतिं न भजते जगत्पते ।
सच्चिदात्मक भवद्गुणोदयानुच्चरन्त-मनिलेश पाहि माम् **||15||**

அர்சிராதி$^{3}$ க$^{3}$திமீத்$^{3}$ரு’ஶீம்’ வ்ரஜன் விச்யுதிம்’ ந ப$^{4}$ஜதே ஜக$^{3}$த்பதே |
ஸச்சிதா$^{3}$த்மக ப$^{4}$வத்$^{3}$கு$^{3}$ணோத$^{3}$யானுச்சரந்த-மனிலேஶ பாஹி மாம் **||15||**

ஹே குருவாயூரப்பா ! உலகநாயகா! ஸச்சிதானந்த வடிவான குருவாயூரப்பா! இப்படி அர்ச்சிராதி ஒளிவடிவான கதியடைபவன் மீண்டும் நழுவித் கீழே வருவதில்லை. உம்முடைய குணங்களைப் பாடும் என்னைக் காத்தருளப் பிரார்த்திக்கிறேன்.

(தொடரும்....)

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

### ||ஸிவபக்தி கல்பலதிகா||

ஸ்ரீ ஸ்ரீதர ஐயாவாள்

ईशान रक्षिततुमिमान् यदपेक्षसे त्वं नत्यादिकं त्दपनेतुमतिप्रसङ्गम् ।

किं हीयते तदनुपाधिकृपाळुता ते संवित्सुखस्य न हि ते प्रियमप्रियं वा ।।

ஈஶான ரக்ஷிததுமிமான் யத³பேக்ஷஸே த்வம்' நத்யாதி³கம்' த்த³பனேதுமதிப்ரஸங்க³ம் |

கிம்' ஹீயதே தத³னுபாதி⁴க்ரு'பாளுதா தே ஸம்'வித்ஸுக²ஸ்ய ந ஹி தே ப்ரியமப்ரியம்' வா ||



என்னை ஆள்பவரே ! இந்த எங்களை காப்பாற்றுவதற்கு எங்கள் பாபத்தை நீக்குவதற்காக எங்கள் நமஸ்காரம் முதலியவற்றை நீங்கள் எதிர்பார்க்கிறீர் என்பது தேவையற்றது. அது எங்கள் நமஸ்காரம் இல்லாவிடில் என்ன குறை ஏற்படும் ஒன்றும் ஆகாது. பேரறிவும், பேரானந்தமுமே உருவான உமக்கு தயைபுரிவது எதையும் எதிர்பார்க்காத ஒரு செயல். உமக்கு விருப்பு, வெறுப்பு என்பன ஒருபொழுதும் இல்லாததே.

अप्याहर प्रहर संहर वाग्वदस्य त्रातास्युपात्तममुना मम नाम हीति ।

एवं विभो तनुभृतामवनेऽप्युपाया- न्वेषी कथं परमकारुणिकोऽसि न त्वम् ।।

அப்யாஹர ப்ரஹர ஸம்'ஹர வாக்³வத³ஸ்ய த்ராதாஸ்யுபாத்தமமுனா மம நாம ஹீதி |

ஏவம்' விபோ⁴ தனுப்⁴ரு'தாமவனே(அ)ப்யுபாயா- ந்வேஷீ கத²ம்' பரமகாருணிகோ(அ)ஸி ந த்வம் ||

சிவ பெருமானே ! கொண்டு வா என்ற பொருள்படும் சொல் 'அடி' என்ற அர்த்தமுள்ள சொல் கொல்லும் என்ற அர்த்தம் உள்ள சொல் என்ற சொல்லை உச்சரிப்பவனை இவனால் ஹர என்ற எனது நாமம் சொல்லப்பட்டதே என்று கருதி நீர் காப்பாற்றுகிறீர். இப்படி ஜீவன்களைக் காப்பாற்றும் விஷயத்தில் வழிமுறைகளைத் தேடுபவரான நீங்கள் பெருங்கருணை கொண்டவர் இல்லையா ? (தொடரும்…) Our Mail ID : Info@voiceofjagadguru.com

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள், ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்